வெளியீடு எண் 442.

உ

சிவமயம்

புள்ளிருக்குவேளூர்த்

திருப்பதிகக் கல்வெட்டுக்கள்

(வைத்தீசுவரன்கோயில்)

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்

அருளாணைப்படி

தருமையாதீனத்திற்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்
வெளியிடப்பெற்றது

தருமபுர ஆதீனம்

25—5—59

உ

சிவமயம்

நூன்முகம்

புள்ளிருக்குவேளூர் அருள் மணக்கும் திருத்தலம்; பாடல் பெற்ற பழம்பதி; மெய்யன்பர் பலரும் போந்து வழிபட்ட மேம்பாடுடையது. இதன்கண் அமர்ந்து தீரா நோய் தீர்த்தருளவல்லானும், தையல்நாயகித்தாயும், செல்வமுத்துக்குமாரப்பெருமானும் வழிபடுவோர் துயர் களைந்து அருள் வழங்கிவருகின்றனர். இத்தலத்திற்கு வந்து வழிபடும் அன்பர்கள் தலத் திருப்பதிகங்களைக் கல்லெழுத்திற் கண்டு ஓதி இன்புறுமாறு ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் பற்றியதுடன் நூல் வெளியீடாக வரவும் ஆணையிட்டருளினார்கள்.

இக் கல்வெட்டுக்கள் சென்னை மாநில அறநிலைய ஆணையர் திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்களால் திறக்கப்பெறும் இத் திருநாளில், இந்நூல் வெளியிடப்பெறுகிறது. தலப் பெருமையும், வரலாறு பற்றிய குறிப்புக்களும் தரப்பெற்றுள்ளன. அன்பர்கள் பெற்று, ஓதி, இருமைப்பேறும் எய்துக.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாணையின் வண்ணம்,

வேளூர் தேவஸ்தானம்,
23—5—59.

சொக்கலிங்கத் தம்பிரான்,
கட்டளை விசாரணை.

உ
சிவமயம்

புள்ளிருக்குவேளூர்

தன்னை அடைந்தார்க்கு இன்பங்களே தருவானாகிய இறைவன் தீராநோய் தீர்த்தருளும் பொருட்டு மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி, ஸ்ரீ வைத்தியநாதர் என்னும் திருப்பெயருடன் திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் தலம் திருப்புள்ளிருக்கு வேளூர் என்பதாகும். இது சோணாட்டில் தஞ்சை ஜில்லா சீகாழி தாலூகாவில் காவிரியின் வடபால் உள்ளது. இது திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களுள் ஒன்றாய்த் திகழ்கிறது.

புள் (ஜடாயு), இருக்கு (இருக்குவேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) என்ற நால்வரும் பூசித்தமையால் புள்ளிருக்கு வேளூர் எனவும் சடாயு பூசித்தமையால் சடாயுபுரி எனவும், கந்தன் பூசித்தமையால் கந்தபுரி எனவும், சூரியன் பூசித்தமையால் பரிதிபுரி எனவும் அங்காரகன் பூசித்தமையால் அங்காரகபுரம் எனவும், அம்பிகை பூசித்தமையால் அம்பிகாபுரம் எனவும் பல பேயர்கள் உள்ளன. இவையன்றி வினைதீர்த்தான்கோயில், தையல்நாயகி கோயில், வைத்தீசுவரன்கோயில் முதலான பற்பல பெயர்களும் இத்தலத்திற்கு வழங்குகின்றன.

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருநாமம் ஸ்ரீ வைத்தியநாதர், அம்மையார் திருநாமம் ஸ்ரீ தையல்நாயகி, முருகப்பெருமான் திருநாமம் செல்வ முத்துக்குமாரர். இப்பெருமானே, "எவ்வாறு துதிப்பேன்" என்று மயங்கிய அருட்புலவராம் குமரகுருபர அடிகளுக்கு "பொன்பூத்தகுடுமி" என அடியெடுத்துக் கொடுத்துப் பாடும்படி அருள் செய்தவர். மேலும் இத்

தலத்தில் நவக்கிரகங்கள் வரிசையாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. இங்கு அங்காரகனுக்குப் பெருமை அதிகம்.

சடாயுகுண்டம் :- சடாயுவின் வேண்டுகோட்படி இராமபிரான் இத்தலத்தில் (விபூதி குண்டத்தில்) சிதையடுக்கிச் சடாயுவின் உடலை வைத்துத் தகனஞ் செய்ததனுல் இப்பெயர் பெற்றது. இன்றும் அக்குண்டத்திலுள்ள நீற்றினை இட்டுக்கொண்டு பலரும் பலவிதமான பிணிகளும் நீங்கப்பெறுகிருர்கள்.

திருச்சாந்துருண்டை :- இது வைத்தியநாதரிடத்தில் நோய் நீங்கப்பெறுவான் வேண்டிப் பெறும் மாத்திரை. முறைப்படி இறைவழிபாடியற்றி உருண்டையைச் சித்தாமிர்தத் தீர்த்தத்தோடு நியமமாகக் கலந்து உண்ணல் வேண்டும். அவ்வாறு உண்பவர்கள் தீராத வினைகளெல்லாம் தீர்ந்து முத்தி யின்பத்தை யடைவர்.

திருஞானசம்பந்தர் :- இவர்கள் திருக்கண்ணுர் கோயிலை வணங்கிக்கொண்டு, புள்ளிருக்கு வேளூருக்கு எழுந்தருளிஞர்கள். 'கள்ளார்ந்த பூங்கொன்றை' என்னும் சீகாமரப் பண்ணை அருளிச்செய்தார்கள். இதில், சம்பாதி சடாயு என்ற இருவரும் ஒரு யோசனை தூரம் சென்று, பூக்கொணர்ந்து வழிபட்டார்கள் என்பது விளக்கப்படுகின்றது. 'தீவினைக்கோர் மருந்தாவான்' என்பதனுள் இறைவன்பெயர் குறிப்பிடப்படுகிறது.

திருநாவுக்கரசர் :- இவர்கள் இத்தலத்திற்கு எழுந்தருளியதாக வரலாற்றுக் குறிப்பிற காணப்படவில்லை. ஆனுலும், 'ஆண்டானையடியேனை' என்னுந்தாண்டகமும் 'வேள்ளேருக்குமரவம்' என்னும் திருக்குறுந்தொகையும் அடங்கன் முறையில் இடம்பெற்றுள்ளன.

உ
சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. 1

1. கொன்றை, மத்தம், மதியம் ஆர்ந்த சடைமுடிப் பெருமானார் உறையுமிடம் சம்பாதி சடாயு என்பார் வழிபட்ட இப்புள்ளிருக்கு வேளூரே யாகும்.

தையலா ளொருபாகஞ் சடைமேலா ளவளொடும்
ஐயந்தேர்ந் துழல்வானோ ரந்தணனா ருறையுமிடம்
மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே. 2

2. மாதொரு பாகன் - அந்தண்மை உடைய அருங்கட வுட்கு உரிய இத்தலத்தேயே பொய்சொல்லாது சம்பாதி உயிர் போனான்.

வாசநலஞ் செய்திமையோர் நாடோறு மலர்தூவ
ஈசனெம் பெருமானா ரினிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு மொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே. 3

3. யோசனை தூரம் போய்ப் பூக்கொணர்ந்து பூசனை செய்து சடாயு வழிபட்ட தலம் இது.

மாகாயம் பெரியதொரு மானுரிதோ லுடையாடை
ஏகாய மிட்டுகந்த வேரியாடி யுறையுமிடம்
ஆகாயந் தேரோடு மிராவணனை யமரின்கண்
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 4

4. சடாயு இராவணன் ஆகாயத்தில் தேரோடு போகாமல் பொருதழித்தான்; அவன் வழிபட்ட அருந்தலம் இது.

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 5

5. பண்ணிசைக்கும் அடியார் குடியாகத் திருவடி வழிபட, வெண்மணலே சிவமாக வழிபட்டான்.

திறங்கொண்ட வடியார்மேற் றீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரா னமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 6

6. அடியார்மேல் தீவினைவராமல் சிவதருமம் உரைத்த சிவபிரானமர்ந்த அருட் சிறப்பும், சடாயு என்பான் பூசித்த பீடும் உடையது இத்தலம்.

அத்தியினீ ருரிமூடி யழகாக வனலேந்திப்
பித்தரைபோற் பலிதிரியும் பெருமானூர் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து
புத்தியொன்ற வைத்துகந்தான் புள்ளிருக்கு வேளூரே. 7

7. பித்தரைப்போல் பலி கொள்ளும் பெருமான் உறையும் இத்தலத்தேயே. பத்தியால் வழிபட்டுப் பலகாலம் தவம் செய்தான் சடாயு.

பண்ணொன்ற விசைபாடு மடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கு மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 8

8. அடியார்க்குக்குடியாக மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டனுக்குரியது இத்தலம். முக்கோடி வாழ்நாள் உடைய இராவணன் அழிக்கப்பட்டான்.

வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்
சாதித்த வில்லாளி கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகனென்ன வகன்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 9

9. திரிபுராதிகளை அழித்த பெருமான் வாழ்வதும், சடாயு பூசித்ததும் இங்கேயே.

கடுத்துவருங் கங்கைதனைக் கமழ்சடையோ னொடாமே
தடுத்தவரெம் பெருமானார் தாமினிதா யுறையுமிடம்
விடைத்துவரு மிலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.

10. விரைந்து வந்த கங்கையைச் சடையில் தடுத்துத் தேக்கிய எம்பெருமானார் உறையுமிடம்.

செடியாய வுடறீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையா மறுபிறப்பே. 11

11. உடல் தீர்ப்பான்; தீவினைக்கு மருந்தாவான்; பொடியாடியாடிய புனிதன். அவனைப்பற்றிய இத்தமிழைச் சொல்லவல்லார்க்கு மறுபிறப்பு இல்லை.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

வெள்ளெ ருக்கர வம்விர வுஞ்சடைப்
புள்ளி ருக்குவே ளூரரன் பொற்கழல்
உள்ளி ருக்கு முணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே. 1

1. எருக்கும், அரவும் உடைய சடையான் கழல் உளத்து வைக்கும் உணர்ச்சியற்றவர் நரகக் குழியிலேயே வீழ்ந்து கிடப்பர்.

மாற்ற மொன்றறி யீர்மனை வாழ்க்கைபோய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லீரேற் புள்ளிருக்கு வேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறுங் காண்மினே, 2

2. கூற்றம் வந்து உமைக் கொள்ளுவதன் முன்னமே புள்ளிருக்குவேளூரைப் போற்றுமின்; சீற்றமாயின தேய்ந் தறும்.

அரும றையனை யாணொடு பெண்ணனைக்
கருவி டம்மிக வுண்டவெங் கண்டனைப்
புரிவெண் ணூலனைப் புள்ளிருக்கு வேளூர்
உருகி நைபவ ருள்ளங் குளிருமே. 3

3. மறைவடிவானவனை, ஆண், பெண் உருவுடையனை, மணிகண்டனை, புள்ளிருக்குவேளூரனை உருகி நைபவர் உள்ளம் குளிரும்.

தன்னு ருவை யொருவர்க் கறிவொணா
மின்னு ருவனை மேனிவெண் ணீற்றனைப்
பொன்னு ருவனைப் புள்ளிருக்கு வேளூர்
என்ன வல்லவர்க் கில்லை யிடர்களே. 4

4. தனது உருவை யாரும் அறியவியலாத மின்னுருவனது புள்ளிருக்குவேளூர் என்று கூறவல்லார்க்கு இடர்கள் இல்லை.

செங்கண் மால்பிர மற்கு மறிவொணா
அங்கி யின்னுரு வாகி யழல்வதோர்
பொங்க ரவனைப் புள்ளிருக்கு வேளூர்
மங்கை பாகனை வாழ்த்த வருமின்பே. 5

5. மாலும் பிரமனும் அறியாத அழலுருவனை வாழ்த்த வரும் இன்பம்.

குற்ற மில்லியைக் கோலச் சிலையினாற்
செற்ற வர்புரஞ் செந்தழ லாக்கியைப்
புற்ற ரவனைப் புள்ளிருக்கு வேளூர்
பற்ற வல்லவர் பாவம் பறையுமே. 6

6. குற்றமில்லியைப் பற்றவல்லவர் பாவம் பறையும்.

கையி னேடுகால் கட்டி யுமரெலாம்
ஐயன் வீடின னென்பதன் முன்னநீர்
பொய்யி லாவரன் புள்ளிருக்கு வேளூர்
மையு லாவிய கண்டனை வாழ்த்துமே. 7

7. மரணம் வருவதற்குமுன் இம் மையுலாவிய கண்டனை வாழ்த்துமின்.

உள்ள முள்கி யுகந்து சிவனென்று
மேள்ள வுள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே. 8

8. உள்ளம் நினைந்து உகந்து சிவன் என்று மெல்ல உள்க வினை கெடுவது மெய்ம்மை யாதலின் வள்ளல் பாதம் வணங்கித் தொழுமின்.

* * * 9

அரக்க னார்தலை பத்து மழிதர
நெருக்கி மாமலர்ப் பாத நிறுவிய
பொருப்ப னுருறை புள்ளிருக்கு வேளூர்
விருப்பி னாற்றொழு வார்வினை வீடுமே. 10

10. புள்ளிருக்குவேளூர் விருப்பினால் தொழுவார் வினை கெடும்.

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஆண்டானை யடியேனை யாளாக் கொண்டு
வடியோடு முடியயன்மா லறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் றன்னை
நேமிவான் படையானை ளுரவோ னுகம்
கீண்டானைக் கேதார மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவா ளரவோ டென்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 1

1. அடியேனையாண்டானை, மாலயனுக்கும் அரியானை, நெடுங்களத்தில் உறைவானை, உரவோனுகம கீண்டானை, கேதாரத்தலத்துறையும் கேடிலியை. அரவும் என்பும் பூண்டானை, வேளூரானைப் போற்றாதே மிக்க நாள் போக்கியது என் பொல்லாமையே.

சீர்த்தானைச் சிறந்தடியேன் சிந்தை யுள்ளே
திகழ்ந்தானைச் சிவன்றன்னைத் தேவ தேவைக்
கூர்த்தானைக் கொடுநெடுவேற் கூற்றந் தன்னைக்
குரைகழலாற் குமைத்துமுனி கொண்ட வச்சம்
பேர்த்தானைப் பிறப்பிலியை யிறப்பொன் றில்லாப்
பெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணிப்
போர்த்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 2

2. பெருமையுடையானை, அடியேன் சிந்தை திகழ்வானை, சிவனை, தேவதேவனை, கூற்றுவனை உதைத்துப் பாலன் அச்சம் களைந்தானை, பிறப்பிறப்பில்லாதானை, யானை

உரியானை, வேளூரானைப் போற்றுதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவு மேத்து மிறைவன் றன்னை
யெம்மானை யென்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை யமுதத்தை யாவின் பாலை
யண்ணிக்குந் தீங்கரும்பை யரனை யாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றுதே யாற்றநாள் போக்கி னேனே. 3

3. அடியேனைப் பாமாலைபாடப் பயில்வித்தானை, தேவர் ஏத்தும் கோவை, என் நெஞ்சத்தே ஊறும் தேனை, அமுதை, பாலை கரும்பை, அரனை, ஆதிப்புத்தேளை வேளூரானைப் போற்றுதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதிமா தவத்து ளானை
யாறங்க நால்வேதத் தப்பா னின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றுதே யாற்றநாள் போக்கி னேனே 4

4. இருள் உள்ளத்தினின்று நீக்கி, இடர்பாவம் கெடுத்து, தெளியாத என் சிந்தையைத் தெளித்து, தன்போல் சிவலோக நெறியறியச் சிந்தைதந்த அருளானை, தவத்துளானை, ஆறங்கத்திற்கும் வேதத்திற்கும் அப்பாலானை வேளூரானைப் போற்றுதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கா றன்னகத்தி லிரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ் புனலி னான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 5

5. விண்ணில் ஒன்றாயும், வளியோடு இரண்டாயும்° தீயோடு மூன்றாயும், புனலோடு நான்காயும், மண்ணோடு ஐந்தாயும் விளங்கும் உருவானவனை, பவளக்கொழுந்தை, முத்தை. ஒளியை, வயிரத்தை, குற்றமற்ற பொன்னுருவை, வேளூரானைப் போற்றாதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

அறையார்பொற் கழலார்ப்ப வணியார் தில்லை
யம்பலத்து ணடமாடு மழகன் றன்னைக்
கறையார்மூ விலைநெடுவேற் கடவு டன்னைக்
கடனாகைக் காரோணங் கருதி னானை
இறையானை யென்னுள்ளத் துள்ளே விள்ளா
திருந்தானை யேழ்பொழிலுந் தாங்கி நின்ற
பொறையானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 6

6. தில்லையிலாடும் அழகனை, மூவிலைநெடுவேற்கடவுளை, இறையானை, ஏழ்பொழிலுந் தாங்கிநின்ற பொறையானை, வேளூரானைப் போற்றாதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை
நீங்காதென் னுள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்றுருத்தி நகரு மேவி
இருப்பவனை யிடைமருதோ டீங்கோய் நீங்கா
விறையவனை யெனையாளுங் கயிலை யென்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 7

7. சிவந்த திருமேனியில் வெண்ணீறணிந்தானை, என் உள்ளத்து விருப்பானவனை, வேதவித்தை, கயிலை யென்னும் பொருப்பை வேளூரானைப் போற்றாதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்க டீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 8

8. வானோர் பேராயிரம்பரவி ஏத்தும் பெம்மானை, அடியார்க்குப் பிறிதோன்றால் வாராத பெருஞ்செல்வம் வருவிப்பானை, மந்திர தந்திர மருந்தாய்த் தீராநோய் தீர்த்தருள வல்லானை, வேளூரானைப் போற்றாதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

பண்ணியனைப் பைங்கொடியாள் பாகன் றன்னைப்
படர்சடைமேற் புனல்கரந்த படிறன் றன்னை
நண்ணியனை யென்னாக்கித் தன்னா னானை
நான்மறையி னற்பொருளை நளிர்வெண் டிங்கட்
கண்ணியனைக் கடியநடை விடையோன் றேறுங்
காரணனை நாரணனைக் கமலத் தோங்கும்
புண்ணியனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே, 9

9. பண்ணியனை, மாதொருபாகனை, சடைமேற்கங்கை கொண்டானை, என்னாக்கித் தன்னான இறைவனை, மறைப் பொருளை, காரணனை, நாரணனை, புண்ணியனைப் போற்றாதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

இறுத்தானை யிலங்கையர்கோன் சிரங்கள் பத்து
மேழுநரம்பி னின்னிசைகேட் டின்புற் றானை
அறுத்தானை யடியார்தம் மருநோய் பாவ
மலைகடலி லாலால முண்டு கண்டம்
கறுத்தானைக் கண்ணழலாற் காம னாகங்
காய்ந்தானைக் கனன்மழுவுங் கலையு மங்கை
பொறுத்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 10

10. இலங்கையர்கோன் சிரங்கள் பத்தும் இறுத்தானை, எழுநரம்பின்னிசை கேட்டுகந்தானை, அடியார்தம் நோய் பாவங்களை அறுத்தவனை, மணிகண்டனை, கண்ணழலால் காமனைக் காய்ந்தானை, மழுவும், கலையும் அங்கையிற் கொண்டானைப் போற்றாதே மிக்கநாள் போக்கியது என் பொல்லாமையே.

திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்,